## Cape Comorin Publisher

Website: www.capecomorinpublisher.com


# Certificate

This is to certify that the chapter titled செங்கல் சூளை – விளிம்பு நிலை மக்களின் வாழ்வு ஓவியங்கள் authored by முனைவர் ஜா. லாலி ஏஞ்சல்

is published in the book titled **விளிம்பு நிலை மக்கள்** is published on February 2022.

Dr. S. Alex Jacob
**Editor**

Dr. R. S. Regin Silvest
**Managing Director**

**CAPE COMORIN PUBLISHER**
**Kanyakumari**
**Tamil Nadu, India**
**www.capecomorinpublisher.com**
**: 9442818648**


**Email: capecomorinpublisher@gmail.com** **Contact +91 9442818648**

# விளிம்பு நிலை மக்கள்



பதிப்பாசிரியர்

முனைவர். எஸ். அலக்ஸ் ஜேக்கப்

| | |
|---|---|
| TITLE | : விளிம்பு நிலை மக்கள் |
| ISBN | : 978-93-91553-93-7 |
| Editor | : முனைவர் எஸ்.அலக்ஸ் ஜேக்கப் |
| Price | : 350/- INR |
| Edition | : First Edition |
| Moth & Year | : February 2022 |
| Total Pages | : 210 |
| Published by | : Cape Comorin Publisher<br>Kanyakumari, Tamilnadu, India |
| Website | : www.capecomorinpublisher.com |
| Printed at | : NSK Digital World<br>Kanyakumari, Tamil Nadu, India |



Copyright © 2022 by Cape Comorin Publisher, All rights Reserved.

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or any other information storage and retrieved without prior permission in writing from the publishers.

Concerned author is solely responsible for his views, opinions, policies, copyright infringement, legal action, penalty or loss of any kind regarding their content. The publisher will not be responsible for any penalty or loss of any kind if claimed in future. Contributing author has no right to demand any royalty amount for his content.

# உள்ளடக்கம்

01. விளிம்பு நிலையில் பீடித்தொழிலாளர்கள் (முக்கூடல், ஆலங்குளம்) 1
திரு. உ.தி. சங்கரநாராயணன் பி லிட்

02. தமிழ்ச்செல்வியின் கீதாரி நாவல் காட்டும் விளிம்பு நிலை மக்கள் 9
முனைவர் ச.பொன்ஜெயந்தி

03. தோல் நாவலில் விளிம்புநிலை மாந்தர்கள் 14
திருமதி. சௌ. சுருதி

04. 'இடக்கை' புதினத்தில் விளிம்புநிலை மாந்தர்கள் 21
முனைவர் க.புவனேஸ்வரி

05. பூர்ணிமை சிறுகதை தொகுப்பு உணர்த்தும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் நிலை 27
முனைவர் மு.சுபாஷினி

06. கி.ராஜநாராயணனின் கிடை புதினத்தில் விளிம்புநிலை மக்கள் 37
முனைவர் இரா.சுந்தரவேல்

07. செங்கல் சுள்ளை – விளிப்பு நிலை மக்களின் வாழ்வு ஓவியங்கள் 42
முனைவர். ஜா. லாலி ஏதேஷ்

08. பாக்கியம் சங்கருடைய நான்காம் சுவரில் விளிம்புநிலை மக்கள் 48
முனைவர் அர.மீனா

09. மூங்கில் தெப்பம் - வெளிப்படுத்தும் விளிம்பு நிலை வாழ்வியல் கூறுகள் 56
முனைவர். ஜா.ஞா.ஜோணி ஜெப மலர்

10. அஞ்ஞாடி நாவலில் விளிம்பு நிலை மக்கள் 62
ஜெ.சுஜாதா

11. எரியும் பனிகாடு நாவலின் வழி தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் 65
மு.சத்தியா

12. குறத்திமுடுக்கு நாவலில் பாலியல்தொழிலாளர் வாழ்வியல் 80
முனைவர் க.ஜெயசீலன்

# செங்கல் சுள்ளை – விளிப்பு நிலை மக்களின் வாழ்வு ஓவியங்கள்



**முனைவர். ஜா. லாலி ஏதேஷ்,**
உதவிப்பேராசிரியர், முஸ்லீம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

**முன்னுரை:**

தமிழ்த் கவிதை இலக்கிய பயணம் புதிய வடிவத்தை உள்ளடக்கி ஒரு நூற்றாண்டை நோக்கி நகர்ந்து வருகிறது. ஆரம்ப கால புதுக்கவிதைகள் மரபு ரீதியான தத்துவார்த்த அரசியலையும், சமூக அரசியலையும் முன் வைத்தாலும் தொண்ணூறுகளுக்கு பிறகான தமிழ் கவிதை பயணத்தில் விளிம்பு நிலை மக்களுக்காக கவிதை பயணம் மிக அதிகமாக நிகழ்ந்துள்ளது. த.ரெஜித் குமார் எழுதிய செங்கல் சுள்ளை என்ற கவிதை நூல் விளிம்பு நிலை மக்களுக்கான வாழ்க்கையை பேசுகிறது.

**விளிம்பு நிலை மக்களும் இலக்கியமும்:**

மைய பண்பாட்டிற்கு எதிரான ஒரு பண்பாடு விளிம்புநிலை மக்களின் பண்பாடு ஆகும். அவர்கள் பொருளாதார ரீதியாகவும், பண்பாடு ரீதியாகவும் தன்னுடைய சுயத்தை இழந்து விலக்கி வைக்கப்படுகிறார்கள். இவர்களின் வாழ்வை எதிர் கொள்வது என்பது இன்றைய இலக்கியத்தின் அடிப்படை தேவையாகும். விளிம்பு நிலை மக்கள் கல்வியிலும் புவியியல் அடிப்படையிலும் கருத்தியல் ரீதியாகவும் பல இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள் இவர்களை குறித்த இலக்கியங்கள் மேலோம்பி வரும் போது பண்முக பண்பாட்டு குரல்கள் நமக்கு கிடைக்கின்றன.

விளிம்பு நிலை என்ற சொல்லிற்கான உண்மையான அர்த்தத்தினை கண்டடைய வேண்டிய தேவை இருக்கிறது. இங்கு தரப்படுத்துதல், அல்லது ஒதுக்குதல், ஒடுக்கப்படுதல், என்று சுரண்டப்படும் மக்கள் கூட்டத்தை நோக்கி பயன்படுத்தப்படும் சொல்லாக இதனை கூறலாம். கடினமாக உழைத்தும் பின்தங்கியிருக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், எளிமையான வாழ்க்கை முறையை தேர்தெடுத்த துறவிகள், குடிபோதை போன்ற தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர்கள் இவர்களை விளிம்பு நிலை மக்கள் என்று வரையறைப்படுத்தலாம். இவர்களின் வாழ்வியலை சித்தரிக்கும் இலக்கியங்கள் விளிம்பு நிலை இலக்கியங்கள் ஆகும்.



விளிம்பு என்பது வர்க்க அடிப்படையிலான வரையறை அல்ல. "சாதி, பால், ...பியல் பொருளாதாரம் எனப் பல்வேறு கூறுகளால் கீழ்நிலைப்படுத்தப்பட்ட ...களைக் குறிப்பது ஆகும். விளிம்புகள் எப்போதும் ஒருபடித்தானவை அல்ல. ... ஒற்றைக் கருத்தியல் கொண்டவையும் அல்ல. இது ஒரு ஒப்பீட்டான ...க்கம் ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கும் ஒன்று அதனினும் விளிம்புகள் ... போது அது மையமாக அமைகிறது"[1].

விளிமம் நிலை மக்கள் தங்கள் வரலாறுகளைப் பற்றி சொல்லி ...கவில்லை. மேல்தரப்பினர் சொல்லியவற்றையே விளிம்பு நிலை மக்களுக்கும் ...டையாக இருக்கிறது. "வரலாற்றின் மையத்தை நோக்கி இயங்க வேண்டும். ...க்கம் பெற்றவர்களிடமிருந்து வரலாற்றைக் கைப்பற்றித் தமதாக்கி கொள்ள வேண்டும். இதனால் மக்களுக்கு விடுதலை சாத்தியம்"[2]

**செங்கல் சுள்ளை மக்களின் வாழ்வு:**

உழைக்கும் மக்களின் படிப்புவாசனை இல்லாத குடிசையில் வாழுகின்ற ...ண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இல்லாத மக்களின் வாழ்வினை கவிதையாக்குவது சமீப காலத்தில் பல கவிதை தொகுப்புகளில் ...ந்திருக்கிறது. குமரி மாவட்ட சூழலில் வறுமையில் வாழும் பல குடும்பங்கள், பள்ளிக் கூட விடுமுறைகளில் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது உண்டு. ...படியான ஒரு காட்சி சித்திரம் ரெஜித் குமாரின் கவிதைகளில் வெளிப்படுவதை ...க்கலாம். வாளியில் கொஞ்சம் பழம் கஞ்சியை குடித்துகொண்டு வேலைக்கு ...க்கி படிக்கப்படாத சிறுவன், எத்தனைச் செங்கல் சுமக்கிறானோ. அந்த செங்கலுக்கு தகுந்தபடியான கூலி, வேலை முடிந்து வீட்டிற்கு வரும்போது உடல் வலி வேறு அந்த வலியோடு நாளைக்கு பள்ளிக்கூடத்திற்கு செல்லவேண்டும் என்ற ஒரு குழந்தையின் குரல், கவிதையை படிக்கும் போது நமக்கு வலிக்கிறது. செங்கல் சுள்ளையை பார்க்கும் போது குறுக்கு (முதுகு) வலிக்கும் என்கின்ற குரல் வலியின் ...ச்சகத்தை தத்தருபமாக பதிவு செய்கிறது.

**"பள்ளி லீவில**
**கொத்தியாரை செங்கசுள்ளைக்கு**
**வேலைக்கு அனுப்புவா அம்மா**
**வாளி நெறைய பழஞ்சிய**
**சுள்ளையில வச்சு குடிச்சிட்டு வேலை**
**வேலை முடிஞ்சி சாயந்திரம் வரச்சில**
**உடம்பு அடிச்சிப் போட்டது**
**போலயிருக்கும்**
**செங்க சுள்ளைய பாக்கச்சில**

---

1. ...மார்கஸ்(க.ஆ) 1998 விளிம்புநிலை ஆய்வுகளும் எழுதலும் சுருக்கமான அறிமுகம் விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ் கதையாடல்களும் பக் 23-24

2. ...ரா.ஞானமேகரன். 1999. துலித் சிந்தனை வாதம் ப.34

குறுக்கு வலிக்கும்
நாளைக்கு இந்த வலியோடுதா
பள்ளிக்குப் போவனும்"[3]

இப்படியான ஒரு வாழ்வியல் சித்திரம் பள்ளிக் கூட குழந்தையின் மூலம் தெரி வருகிறது.

**விளிம்பு நிலை பெண்களின் வாழ்வியல் சித்திரம்:**

செங்கல் சுள்ளையில் வேலை பார்க்கின்ற பெண்கள் அல்லது உட உழைப்பை ஆண்களோடு இணைந்து பகிர்ந்து கொள்ளும் பெண்கள், இவர்களுக்கா சம்பளம் முதல் பாலியல் சுரண்டல்கள் வரை, வெவ்வேறு கோணங்களில் பதிவாவதை பார்க்கலாம். பொதுவாக படித்து பட்டம் பெற்ற பிறகு வேலைக்கு போகு பெண்களுக்கு இது போன்ற நெருக்கடிகள் வருவதுண்டு. வாழ வழியற்று வறுமையி கோரபிடியில் சிக்கி தானும் வேலைக்கு சென்றால் தான் குடும்பத்தை நகர்த்த முடியு என்று வாழ்கின்ற பெண்களின் உலகம் ரெஜித் குமாரின் ஒரு கவிதையி துல்லியமாக தெரிகிறது.

**செங்க சுள்ளையில**
**புரட்சி செய்தவ**
**கோமதி தான்**
**ஆம்பளைக்குச் சமமா**
**மொதல்ல கல்லறுத்தவ**
**கல்யாணம் முடிஞ்சி எப்போம்**
**அப்பதிலயிருந்து**
**சுள்ளப் பெரைதான் கதியாச்சி**
**கல்லடுக்குவது**
**கல்லறுப்பது**
**கல்லு வைப்பது**
**மண் உருட்டுவது**
**மண் வெட்டி தொளி மிதிப்பதுன்னு**
**எல்லா வேலையும் அத்துபடி**
**இதல்லெல்லாம்**
**காம மிருகங்களின்**
**கையில சிக்கித்தவறி படிச்சதுதான்**
**அம்மைக்கிட்ட பேசச்சில**
**கல்லறுத்தா வெடிக்காதுன்னு**
**இவளே சுள்ள அடுக்கச்சில**
**சுள்ள சரிஞ்சி விழுந்ததில**
**கால் ஒடிஞ்சிக் கிடக்கா"[4]**

இந்த கவிதைக்குள் ஒரு ஆணாதிக்க சமூகம் உடல் உழைக்கும் சக பெண் தொழிலாளியை கூட விட்டு வைக்கவில்லை என்பது குறித்தும், அவளது வாழ்வி

[3] செங்கல் சுள்ளை ப 29-30
[4] செங்கல் சுள்ளை ப.78



... பகுதி, கால் ஒடிந்த கிடப்பதாகவும் முடியும் போது வேதனையின் உச்சத்தை ... கவிதை எழுதி செல்வதை கவனிக்கலாம்.

**... குடிமகனின் குறித்த வாழ்வியல் சித்திரம்:**

ஓர் ஊர்குடிமகன் இறப்பு சடங்கு செய்வதாக ஒரு கவிதை ...பட்டுள்ளது. குழிவெட்ட நீர் மாலை எடுக்க, பந்தல் போட, சங்கூத, ...த்தை குளிப்பாட்ட, சவரம் செய்ய, பௌடர் பூச, ஓலை முடஞ்சு பாட கட்ட, ...கரையில மொட்டையடிக்க, இப்படியெல்லாம் குறிப்பிட்ட சமூகத்திற்கு பிணத்தை ...ளிபோடுவது வரைக்கும் செய்கின்ற நாவிதர் குறைவான பணம் கொடுத்து, ... வார்த்தைகளால் திட்டுது, அவனை அடிப்பது இப்படியான ஒரு சமூக ...த்தை ரெஜித் குமார் குடிமகன் என்ற கவிதையில் எழுதுகின்றார். கவிதையை ...கும் போது ஒருவேளை அடியந்தரத்திற்கு குடிமகன் வரவில்லையென்றால் ..., செய்ய ஆளில்லாமல் நாறி விடும் என்று கூறுகின்றார். இந்த கிதை ...லும் விளிம்பான ஒரு சமூகத்தின் வாழ்வியல் வலியை எழுதி செல்கிறது. ... கீழ் படிநிலைக் கொண்ட சமூக அமைப்பு விளிம்பு நிலை தொழிலாளிகளை ...படுத்தவதும், அடிமைப்படுத்துகின்ற மனநிலையையில் இருப்பதையும் ...க முடிகிறது.

தன்னுடைய உழைப்புகான கூலியை கேட்கும் போது அவனை கேவலமாக ... அவமானப்படுத்துகிறது. இன்று வரை வெவ்வேறு வடிவங்களில் தொடர்கின்ற ...முறைக் திமிரை இந்த கவிதை தோலுரித்து காட்டுகிறது. இந்த நீள் ...தையில் கடைசி பகுதி இப்படி முடிகிறது.

**"நாசுவப்பயனுக்கு வாயப்பாருன்னு**
**அடிச்சாங்க... பெரியவங்க அடிச்சவன ஒதுக்கிட்டு**
**அவர சமாதானம் செஞ்சியனுப்பினாங்க**
**வந்தாரு கோவாலன்**
**மூணுக்கு அடியந்திரம் சடங்குச் செய்ய**
**வரலன்னா நாறப்பிழைப்பு**
**நாறிவிடும்னு ...."[5]**

அதுபோல புறவாசல் வழியாக குறுங்கட்டியில் இருந்து கொண்டு முடிவெட்டி ...கின்றவன் போனவுடன் நாசுவன் கை பட்டால் தீட்டு என்ற அர்த்தத்தில் ஆற்றில் ... குளிக்கின்ற வாழ்வும் ஒரு கவிதையில் வருகின்றது.

**...டார் மருத்துவம் சார்ந்த விளிம்பு நிலை மருத்துவம்**

பச்சிலை என்கிற தலைப்பில் வருகின்ற கவிதை விளிம்புநிலை மக்களின் ...த்துவ குறிப்புகளை பேசுகிறது. இன்று ஆயிரக்கணக்கில் ஆங்கில ...த்துவத்திற்கு நாம் காசு செலவு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் நம்மிடையே ...கையோடு இயைந்த வாழ்க்கை இருந்திருக்கிறது. பறவைகளோடும், செடி ...களோடும், விலங்குகளோடும் ஒரு வாழ்க்கை இருந்திருக்கிறது. அம்மாவை ...படுத்துகின்ற மகனின் குறிப்புகளாக ஒரு கவிதை நீள்கிறது தலை வலிக்கு

[5] செங்கல் சுள்ளை ப.69

கரிசலாம் கண்ணி நெச்சிலிலை, ஆவி பிடிப்பது, சளிக்கு தும்பை சாறு பிழி[ந்து] விடுவது, காது வலிக்கு வெற்றி சாறு விடுவது, சொறி சிரங்கிற்கு குப்பை மேனி[யை] அரைத்து பூசுவது. உடம்பிலுள்ள சின்ன கட்டிக்கு சீலாந்தி மரக்கட்டையை பொடி[த்து] பூசுவது, புண் வந்தால் வல்லாரை கீரையை அரைத்து பூசுவது இவை அனைத்[தும்] இன்று விளிம்பு நிலை மக்களுக்கு இல்லை. இன்றைய புதிய தலைமுறை ஒரு சி[ன்ன] பீச்சலுக்கு கூட டாக்டரை தேடி செல்கிறது என்று ஒரு கவிதை முடிகிறது.

**காட்டில் விறகு வெட்டும் விளிம்பு நிலை வாழ்வு:**

ஆன கிடங்கு மலையில் விறகு வெட்ட போகின்ற அப்பா பற்றிய ஒரு நீ[ண்ட] கவிதையில் அப்பா விறகு வெட்டுவது கட்டுசோற்றை சாப்பிடுவ[து] பாறைகளுக்கிடையேயுள்ள ஊற்று தண்ணீரை குடிப்பது கருப்பட்டியும் காத்[தா] மிளகும் வைத்து சாப்பிடுவது, சுக்கு நாறு புல்லை கயிறாக்கி விறகு கட்டவது, சுக்[கு] நாறி புல்லால் சும்மாடு வைப்பது இப்படி காட்டிலிருந்து விறகுவெட்டி த[லை] தாளுமளவுக்கு வீட்டிற்கு வந்து விறகை விற்றால் தான் வீட்டில் அடுப்பு எரியு[ம்] இப்படியான ஒரு விளிம்பு நிலை சித்திரத்தை படம் பிடித்து காட்டியிருக்கிறார் கவி[ஞர்].

**“பழைய படியும் விறகுக்கட்ட தூக்கிட்டு நடப்பாரு**
**தலை குன்னுறளவுக்குப் பாரம் அதிகமாயிருக்கும்**
**அத கொண்டு வந்து வித்தாதான்**
**வீட்டுல அடுப்பெரியும்**
**ஆனக்கிடங்கு மலைய**
**பாக்கும் போதெல்லாம்**
**அப்பா நடந்து வாராரு**
**சுமையோடு”[6]**

**புழங்கு பொருட்களோடு கூடிய விளிம்புநிலை வாழ்வு:**

பொதுவாக நமது சமூக அமைப்பில் பண்பாட்டு ஓர்மைகளுக்குள் நாம் மறந்[து] போன ஒரு முக்கியமான விஷயம் புழங்கு பொருட்கள். ஒவ்வொரு தொழில் சார்ந்[த] செயல்களுக்கு பின்னாலும் புழங்குப் பொருளுக்கான ஒரு செய்தி புதைந்திருக்கு[ம்] ஆட்டு உரல், மஞ்சாகயிறு, அம்மி, குட்டுவம், ஊஞ்சல், கதிர் அரிவாள் இப்ப[டி] இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். வெறும் புழங்கு பொருளாக இல்லாமல் அ[து] வாழ்வியல் செய்தியாக நீள்வதை கவனிக்க முடியும்.

**“பழஞ்சியும் தொட்டுக்க**
**பச்சமிளகாயோ உள்ளியோ**
**சம்மந்தியோ வைச்சி**
**செம்பு பாத்திரத்தில**
**தருவா அம்மா**
**அப்பாவுக்கு வட்டிலும்**
**அண்ணனுக்கு கும்பாவிலும்**
**அக்காவுக்கு தங்கச்சிக்கும் தாலத்திலும்**
**எனக்குத் தழுவையிலும்**

---

[6] செங்கல் சள்ளை ப.105



**தம்பிக்குக் கிண்ணத்திலும்**
**ஊத்தித்தருவா**
**புரண் மீதிரந்த செம்பு பாத்திரங்களையெல்லாம்**
**சாக்கில் அள்ளிக் கொண்டு போனா அம்மா**
**புது குட்டுவத்துடன் திரும்பி வந்தாள்”[7]**

**முடிவுரை**

விளிம்பு நில மக்கள், இந்த மண்ணில் உழைக்கும் மக்கள், பெரும்பான்மை மக்கள். அவர்களை பேசுகின்ற இலக்கியம் தான் மிக சிறந்த இலக்கியம். அவர்கள் வாழ்வுக்காக போராடுகின்ற வாழ்வை, காடு மேடுகளில் அலைந்து திரிந்த வாழ்க்கை. இந்த விளிம்பு நில மக்களின் வாழ்வு, கொஞ்சம் மகிழ்ச்சியும், அதிகப்படியான துயரமும் வலியும் மிகுந்த வாழ்க்கையாகும். இந்த வாழ்க்கையினுடைய நுட்பமான உணர்வுகளை குமரி மாவட்ட வட்டார மொழியை கொண்டு மிக சிறப்பான வகையில் ரெஜித் குமார் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது ஆய்வின் மூலம் புலனாகிறது. விளிம்பு நிலை மக்கள் மைய நீரோட்டத்தை விட்டு விலகி தங்களுக்கான உலகத்தை உருவாக்கியிருக்கிறார்கள் இந்த இலக்கிய பிரதி வழியாக கண்முன்னே தெரிகிறது.

**அடிக்குறிப்பு**

1. அ.மார்கஸ் 1998 விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ் கதையாடல்களும் பக் 23,24
2. தா. ஞானசேகரன் 1999 தலித் சிந்தனை வாதம் ப.34
3. ரெஜித் குமார், செங்கல் சள்ளை ப.29-30
4. மேலது ப.78
5. மேலது ப.69
6. மேலது ப.105
7. மேலது ப.95

---

[7] செங்கல் சள்ளை ப.95